செ.வெ.எண்: 200 நாள்: 28/2/2011

<u>பத்திரிக்கைச் செய்தி</u>

# தேசிய நுண்ணீர் பாசன இயக்கம் (NMMI)

பெருகி வரும் மக்கள் தொகை காரணமாகவும், தொழில் வளர்ச்சி மற்றும் வேளாண் வளர்ச்சி காரணமாகவும், தண்ணீரின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனால் நிலத்தடி நீர் மட்டத்தின் அளவு குறைந்து வருகிறது. எனவே, வேளாண்மையில் பாசன நீரை சிக்கனமாக பயன்படுத்துவதற்காக புதிய நீர்பாசன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ள சொட்டு நீர் பாசனம், தெளிப்பு நீர் பாசனம் முதலிய பாசன முறைகள் நுண்ணீர் பாசனத் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த பாசன முறைகளில் பாசன நீரை சிக்கனமாக பயன்படுத்தி, கூடுதல் பரப்பில் சாகுபடி மேற்கொள்வதோடு குறைவான வேலை ஆட்கள் செலவு, சீரிய உர பயன்பாடு, களை கட்டுப்பாடு முதலிய பயன்களோடு பயிர் மகசூலின் அளவு மற்றும் தரம் அதிகரிக்கிறது.

எனவே, நுண்ணீர் பாசன முறைகளை விவசாயிகள் பயன்படுத்துவதை ஊக்கபடுத்துவதற்காக மத்திய மற்றும் மாநில அரசுகளின் பங்களிப்போடு தேசிய நுண்ணிர் பாசன இயக்கம் என்ற திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

இத் திட்டத்தினை சீரிய முறையில் செயல்படுத்துவதற்காக சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வழங்கப்படும் மானியத்தை 10 சதவிகிதம் உயர்த்தி 75 சதவிகிதம் மானியம் வழங்கப்படும். இதர விவசாயிகளுக்கு 65 சதவிகிதம் மானியம் வழங்கப்படும்.

புதிதாக இத் திட்டத்தில், உரம் கலக்கும் கொள்கலன் அல்லது வென்சுரி என்ற கருவிக்கும் மானியம் வழங்கப்படும். மேலும் புதிதாக கூடுதல் சக்தி கொண்ட தெளிப்பு நீர் பாசனம் (ரெயின் கன்), சிறிய அளவிலான தெளிப்பு நீர் பாசனம் முதலிய பாசன முறைகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

மேலும் புதிய திட்டத்தின்படி, நுண்ணீர் பாசனக் கருவிகளில் உரம் கலக்கும் கொள்கலன் சேர்க்கப்பட்டு நுண்ணீர் பாசனம் அமைக்கப்படும் பரப்பிற்கான மதிப்பீட்டுத் தொகை மற்றும் அதற்கான மானியம் உயர்த்தப்பட்டுள்ளது.

உதாரணமாக 12x12 மீட்டர் இடைவெளியில் பயிரிடப்படும் பயிர்களுக்கு முந்தைய திட்டத்தில் ஒரு எக்டர் பரப்பிற்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.16,700/- என்பது தற்போது ரூ.18,820/- ஆக உயர்த்தப்பட்டு அதற்கான மானியம் வழங்கப்படும். 2x2 மீட்டர் இடைவெளியில் பயிரிடப்படும் பயிர்களுக்கு முந்தைய திட்டத்தில் மதிப்பீட்டுத் தொகை ஒரு எக்டருக்கு ரூ.49,800/- என்பது புதிய திட்டத்தில் ரூ.63,598/- ஆகவும் உயர்த்தி மானியம் வழங்கப்படும்.

குறைந்த இடைவெளியில் பயிர் செய்யப்படும் காய்கறி பயிர்களின் சாகுபடியை ஊக்கப்படுத்துவதற்காக, புதிய திட்டத்தில் கூடுதலாக மூன்று வகை இடைவெளிகளுக்கான மதிப்பீடுகள் சேர்க்கப்பட்டுள்ளன. உதாரணமாக 1.2x0.6 மீட்டர் இடைவெளியில் பயிரிடப்படும் பயிர்களுக்கு மதிப்பீட்டுத் தொகை ஒரு எக்டருக்கு ரூ.97,598/- என நிர்ணயிக்கப்பட்டு அதற்கான மானியமும் வழங்கப்படவுள்ளது.

மேலும் நுண்ணீர் பாசனம் தொடர்பான புதிய தொழில் நுட்பங்களில் களப்பணியாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு பயிற்சி வழங்குவதற்காகவும் நிதி ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளது.

எனவே விவசாயிகள் அனைவரும் அரசு வழங்கும் மானியத்தினை பயன்படுத்தி, உயர் தொழில் நுட்பத்துடன் கூடிய நுண்ணீர் பாசன முறைகளை தங்கள் வயல்களில் அமைத்து பயன்பெற கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

2/2